# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

## <u>MCOP. No.732/2018</u>

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 05–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கை நகல் ம.சா.ஆ.1, என்னுடைய ஆதார்அட்டை நகல் ம.சா.ஆ.2, விபத்து பதிவேட்டு நகல் ம.சா.ஆ.3, காயச்சான்று ம.சா.ஆ.4, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுசான்று நகல் ம.சா.ஆ.5, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன காப்பீடு சான்று நகல் ம.சா.ஆ.6, விபத்து வாகனத்தை ஓட்டிய வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.7, நான் சென்ற வாகனத்தின் பதிவு புத்தகம் நகல் ம.சா.ஆ.8,

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

என்கணவர் காய்கறி வியாபாரம் செய்கிறார். ஷேர்ஆட்டோவில் சுமார் 15 பேர் வரை சென்றிப்போம். நான் ஷேர்ஆட்டோவின் பின் சீட்டில் நடுவில் உட்கார்ந்திருந்தேன். நான் பின்பகுதியில் உட்கார்ந்திருந்ததால் விபத்து எப்படி நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரில் வந்த வாகனம் வேகமாக வந்ததா, அல்லது மெதுவாக வந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது. எந்த ரைஸ்மில்லில் நான் வேலைபார்த்தேன் என்று நிருபணவாக்குமூலத்தில்

கூறவில்லை  என்றால் சரிதான். நான் பெரம்பலூர் மருத்தவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக திருச்சி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அங்கு சிகிச்சை பெற்றேன். நான் அதிகமான நஷ்டஈடு கேட்டுள்ளேன் என்றும், அது எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.